தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் - 1 (தொகுதி -1)**ல் அடங்கிய துணை ஆட்சியர் (29), காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (34), வணிக வரித்துறை உதவி ஆணையர் (8), மாவட்டப் பதிவாளர்(1), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (5), தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மாவட்ட அலுவலர் (8) ஆகிய பதவிகளுக்கான 85 மொத்த காலிப்பணியிடங்களுக்கான அறிவிக்கை 09.11.2016 அன்று வெளியிடப்பட்டு 19.02.2017 அன்று **217773** விண்ணப்பதாரர்களுக்கு முதனிலைத் தேர்வும், 13.10.2017, 14.10.2017 மற்றும் 15.10.2017 ஆகிய நாட்களில் **4199**விண்ணப்பதாரர்களுக்கு முதன்மை எழுத்துத் தேர்வும் நடத்தப்பட்டது. எழுத்துத் தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள், இடஒதுக்கீட்டு விதி மற்றும் அப்பதவிகளுக்கான அறிவிக்கையில் வெளியிடப்பட்ட பிற விதிகளின் அடிப்படையில் **மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்தேர்வுக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 176 விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள்** கொண்ட பட்டியல் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in ல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கான **மூலச் சான்றிதழ் சர்பார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியன 21.01.2019 முதல் 25.01.2019 வரை** நடைபெறவுள்ளது. இதற்கான குறிப்பாணை வழக்கம்போல் தேர்வாணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு, தெரிவாளர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

இரா. சுதன், இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

தேதி: **31.12.2018**